விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 361 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 29 வெள்ளிக்கிழமை (15.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

**கல்யாண மாலை**
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் புதிய கூட்டணி



### திரைமறைவில் ரகசிய காய்நகர்த்தல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் புதிய அரசியல் கூட்டணியொன்றை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகள் திரைமறைவில் இடம்பெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சு.கவின் அமைச்சர்கள் இரு 15

### வடக்கில் அடுத்துவரும் நாட்களில்

## காலநிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்பு தொடர்பில்

### உயர்மட்ட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் எதிர்வரும் நாட்களில் காலநிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகள், அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது மற்றும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் இணையவழி உயர்மட்ட கலந்துரையாடல் நேற்று மாலை நடைபெற்றது.

கடற்றொழில் 15

## பிரித்தானிய இளவரசி

### இலங்கை வருகிறார்



15

# யாழ்.மாவட்டத்தில் டெங்கு அதிகரிப்பு

## அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

- கலந்துரையாடல்கள் ஊடாக பொதுமக்களை தெளிவுபடுத்துமாறு அறிவுறுத்தல்.
- டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளுக்கு பொலிஸ் மற்றும் முப்படைகளின் ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்ளுமாறு ஆலோசனை.



வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகூடிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக, மாகாணத்தின் டெங்கு நிலைமை தொடர்பான மீளாய்வு கூட்டத்தின்போது தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சலால் வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன், 2192 02

## இரணைமடு குளத்தின் வான்கதவுகள் திறக்கப்படலாம்

(கிளிநொச்சி)

இரணைமடு குளத்திற்கு அதிக நீர் வருகை காணப்படுவதால் இன்று அதிகாலை 4 மணியளவில் வான் கதவுகள் திறக்கப்படலாம் என நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது. 15

## வெளிநாட்டுத் தூதுவர் மூவர் யாழ்.மாவட்டத்துக்கு விஜயம்



15

## ரணிலின் 'பட்ஜெட்' கீழ்த்தரமானது

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



(கொழும்பு)

சாதாரண மக்களைப் புறக்கணித்து பெரும் செல்வந்தர்களை போஷிக்கும் வரவு - செலவுத் திட்டம் மூலம் சமூகத்தில் எந்தத் தரப்புக்கும் எந்த நன்மையும் கிட்டவில்லை. இதனை மிகவும் கீழ்த்தரமான வரவு - செலவுத் திட்டம் என்றே அழைக்கலாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பின் பின்னர் ஊடகங் 02

## நாட்டில் மீண்டும் யானைக்கால் நோய்

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் யானைக்கால் நோய் பரவி வருவதாக சுகாதார திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் யானைக்கால் நோய் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

கிராமப்புறங்களில் இந்நோய் பரவும் அபாயம் அதிகம் என சுகாதார பூச்சியியல் அதிகாரி 15

## நடிகை ரம்பா யாழ்.விஜயம் மருதடியில் விசேட வழிபாடு



(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய தமிழ் நடிகை ரம்பா யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து தனது குடும்பத்துடன் மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோயிலில் விசேட வழிபாடுகளில் ஈடுபட் 15

## சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

டிசம்பர் மாதத்தின் முதல் 10 நாட்களில் 50,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தலைமையில் புதிய கூட்டணி

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் புதிய அரசியல் கூட்டணியொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஜனவரி மாதம் இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் இடம்பெறும் எனத் தெரிய வருகிறது.

உருவாக்கப்படும் கூட்டணியில் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாச நியமிக்கப்பட உள்ளார். குறித்த கூட்டணி வெற்றிபெற்ற பின்னர் உருவாக்கப்படும் அரசாங்கத்தில் ஜீ.எல். பீரிஸை பிரதமராக நியமிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதற்கு பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர ஜனதா சபையின் சில உறுப்பினர்கள் ஆதரவளித்துள்ளனர்.

இதன் காரணமாக டலஸ் அழகப்பெரும அதிருப்தி அடைந்துள்ளதாகவும் சுதந்திர ஜனதா சபையிலிருந்து வெளியேற தயாராகி வருவதாகவும் அறிய முடிகிறது.

சுதந்திர ஜனதா சபையின் உரிமையாளரான நாலககொடஹேவா எதிர்காலத்தில் சுதந்திர ஜனதா சபையை கலைத்துவிடுவார் அல்லது ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் இணைந்துக்கொள்ளக் கூடும் எனவும் தெரிய வருகிறது. (ம-7)

### பல்கலைக்கழகம் இயங்குவது மகிழ்வுக்குரியது ஆனாலும்

# ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் உள்ள வழிபாட்டுத்தலங்கள் விடுவிக்கப்படவேண்டும்

### கலாநிதி ஆறு. திருமுருகன் கருத்து



(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் உள்ள ஜனாதிபதி மாளிகை பல்கலைக் கழகமாகப் பயன்படுவது மகிழ்ச்சிக்குரியது.

இதன் மூலம் எமது மாணவர்கள் பட்டப்படிப்புக்களை மேற்கொள்வதற்கு வாய்புகள் ஏற்படும் என கலாநிதி ஆறு.திருமுகன் தெரிவித்தார்.

காங்கேசன்துறையில் உள்ள ஜனாதிபதி மாளிகை குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

காங்கேசன்துறையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் பல்கலைக்கழகம் இயங்கும் அதே நேரம், ஜனாதிபதி மாளிகை அமையப்பெற்ற இடத்தில் இருந்த சிவாலயம் மற்றும் சித்தர்களின் மடங்கள் மீளவும் வழிபாட்டிற்குரிய இடங்களாக ஒதுக்கப்பட வேண்டும் என்பது நியாயபூர்வமான கோரிக்கை.

எனவே சைவமக்களின் வழிபாட்டுத் தலங்களாக இருந்த இடங்களை விடுவித்து ஜனாதிபதி மாளிகையில் பல்கலைக்கழகம் நடத்தும்போது அது அனைவரையும் ஆற்றுப்படுத்தும். எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் நியாயபூர்வமாக நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை தமக்கு உண்டு என்றும் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார். (ம-7)

# மல்லாகம் மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மல்லாகம் மகா வித்தியாலய ஆசிரியர்கள் மாணவர்கள் இணைந்து நேற்றைய தினம் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

நேற்று வியாழக்கிழமை மதியம் 1.30 மணியளவில் குறித்த போராட்டம் பாடசாலை முன்பாக இடம்பெற்றது.

நவம்பர் 27ம் திகதி கொக்குவிலில் உள்ள, மல்லாகம் மகா வித்தியாலய அதிபரின் வீட்டில் நுழைந்து இனந்தெரியாத நபர்களால் நடாத்தப்பட்ட வாள்வெட்டு தாக்குதலுக்கு நீதி கோரியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதிபர் மீதான தாக்குதலுக்கு நீதி கோரியும் இனிமேல் இவ்வாறான தாக்குதல் சம்பவம் நடைபெறக்கூடாது என்றும் மாணவர்கள் சுமூகமாக கல்வி கற்பதற்கான சூழலை உருவாக்க கோரியும் போராட்டகாரர்களால் வலியுறுத்தப்பட்டது.



போராட்டத்தின் முடிவில் தெல்லிப்பழை கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு போராட்டகாரர்களால் மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது. (ம-7,33)


## கனடாவிற்கு TOURIST விசா தேவைப்படுபவர்கள்

உடன் தொடர்பு கொள்ளவும்.

- 5-18 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான Student விசாவும் பெற்றுத் தரப்படும்.
- மாணவர்களின் பாதுகாவலர்களுக்கும் 10 வருட விசா பெற்றுத் தரப்படும்.
- மலேசியாவில் உணவகம் ஒன்றில் பணியாற்ற 5 பேர் தேவைப்படுகின்றனர்.

விண்ணப்பிக்க இன்றே அழையுங்கள்.

**Hybrid international hub (pvt)ltd.**

யாழ்ப்பாணம்

((வேம்படி மகளிர் கல்லூரி அருகில்))

தொடர்புகளுக்கு

**077 815 5920, 076 250 0098, 021 222 1265**

(C-7901)


## மரண அறிவித்தல்

### செல்வரட்ணம் பரமேஸ்வரி

**( கண்டக்கா )**

தோற்றம் 02.07.1957 — மறைவு 14.12.2023



உத்திராவத்தை புலோலி வடகிழக்கு பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் பரமேஸ்வரி (கண்டக்கா) அவர்கள் நேற்று (14.12.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நவசிவாயம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா - அன்னம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் செல்வி, கடுங்கோ, இறைவன், நந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் கிள்ளிவளவன், அஜிதா, பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமியும் தவமணி, காலஞ்சென்ற சிவஞ்ஞானசுந்தரம், சிவபாதசுந்தரம், சுப்பிரமணியம், சிறிஸ்கந்தராசா, காலஞ்சென்ற சிவநேசன், சிவறாஜன், காலஞ்சென்ற சிவறாஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஷப்த்தஸ்வனா, கபிலன், அபிஷன், சந்தியா, நிதுலன், நிலானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2023) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

நந்தினி : 077 288 0037

(C-7900)

## யாழ். மாவ...

பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நேற்று நடைபெற்ற மீளாய்வு கூட்டத்தில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கணேஸ்வரன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண சிரேஷ்டபிரதிபொலிஸ் மாஅதிபர், மாவட்ட அரசாங்க அதிபர்கள், சுகாதார பணிமனைகளின் அதிகாரிகள் உள்ளிட்டோர் நேரடியாகவும், சூம் ஊடாகவும் கலந்துக்கொண்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்த மீளாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் மிகக் குறைவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், எனினும்நிலைமை கட்டுப்பாட்டிற்குள் காணப்படுவதாகவும் அந்தந்த மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும், சுகாதார துறைசார் அதிகாரிகளும் தெரிவித்தனர்.

இந்நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை தொடர்பிலும், டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதில் சுகாதார துறையினர் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் அதிகாரிகளால் ஆளுநருக்கு விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

அதற்கமைய, டெங்கு நுளம்பு பரவுவதை தடுக்கவும், பொதுமக்களுக்கு இது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் கிராமிய மட்டத்தில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார். வடிகான் துப்பரவு ஒழுங்கு முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், கைவிடப்பட்ட மற்றும் பராமரிப்பற்ற காணிகளில் நுளம்பு பெருகுவதை தடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

பராமரிப்பற்ற காணிகள் தொடர்பில், காணி உரிமையாளர்களுக்கு எதிராக விரைவான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். (ம-7,33)

## ரணிலின்...

களுக்கு கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,

சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் இன்னும் 8 தவணைகளைப் பெற வேண்டும். எனவே, இரண்டாம் தவணை கிடைத்தமைக்காக ஆரவாரப்பட்டு கொண்டாடக் கூடாது.

ஊழலை எதிர்க்கும், ஊழலை இல்லாதொழிக்கும் மற்றும் நல்லாட்சிக்காக தயாராகும் எந்தவொரு நபருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் கதவுகள் திறந்தே இருக்கும்.

ரொஷான் ரணசிங்க, அவருக்கு இருந்த அனைத்து அமைச்சுப் பதவிகளையும் சலுகைகளையும், வரப்பிரசாதங்களையும் மறந்து ஒரு கொள்கை ரீதியான முடிவை அணுகியது சீரழிந்து வரும் அரசியல் கலாச்சாரத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து, புதிய பிரவேசத்தின் தொடக்கமே." என்றார். (ம-7)


## பெண் வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள வீடொன்றில் 35 - 60 வயதிற்கு உட்பட்ட தங்கி நின்று வேலை செய்யக் கூடிய 02 பெண் வேலையாட்கள் தேவை.

- சமையல் வேலை 45,000/= + உணவு + தங்குமிடம்
- 04,06 வயது பிள்ளைகளை பார்ப்பது 45,000/= + உணவு + தங்குமிடம்

(18232)

077 937 0000 | 075 498 5400 | 021 221 7600


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டு நாட்டில் கடும் வறட்சி!

## உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

### நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**எதிர்வரும் பெப்ரவரி மற்றும் அடுத்த ஆண்டின் நடுப்பகுதிக்கு இடையில் கடுமையான வறட்சி ஏற்படும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.**



நாட்டின் உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் மற்றும் பொருளாதார நெருக்கடியால் மக்கள் இன்னல்களை எதிர்கொள்ளும் தற்போதைய நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் மற்றும் இலங்கையின் உணவுப் பாதுகாப்பில் அதன் தாக்கம் குறித்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உயர்மட்ட விஞ்ஞான அமர்வில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு குடும்பங்களுக்கு உணவுப் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் பொருளாதார நெருக்கடி மற்றும் காலநிலை மாற்றத்தால் இந்த நிலையை நிவர்த்தி செய்வது மிகவும் கடினமாக இருக்கும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது, உணவுப் பொருட்களின் விலை உயர்வால் நுண்ணூட்டச் சத்து இடைவெளி அதிகரித்து வருவதாகவும் நிகழ்வில் உரையாற்றிய நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி-6)

## ஆயிரம் ரூபாவாக அதிகரித்த பச்சைமிளகாய்

(கொழும்பு)

சந்தையில் தற்போது சில மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர்.

இதேவேளை போஞ்சி, கரட், லீக்ஸ், மற்றும் முள்ளங்கி போன்ற மரக்கறிகள் கிலோ ஒன்று 400 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு கிலோகிராம் தக்காளி 500 ரூபாவாகவும் ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 1000 ரூபாவாகவும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் விவசாயிகளிடம் கொள்வனவு செய்யப்படுகின்ற விலையை விட அதிகரித்த விலையிலேயே மரக்கறிகள் விற்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் அண்மைக்காலாக அதிகளவான பொருட்களின் விலை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-6)

## ஐ.எம்.எப் இன் தாளத்திற்கு ஆடும் இலங்கைக்கு விமோசனமில்லை

### விமல் வீரவன்ச விசனம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கமைய ஆடும் இலங்கைக்கு விமோசனம் கிடையாது. அடுத்த ஆண்டு சமூக கட்டமைப்பு பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க பதவிக்கு வந்தவுடன் இலங்கை வங்குரோத்து நிலையடைந்து விட்டது என்று அறிவித்தார்.

இந்த அறிவிப்பை அமைச்சரவையோ, பாராளுமன்றமோ அறியவில்லை.

இலங்கையை போலவே பாகிஸ்தானும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மீட்சிக்காக பாகிஸ்தான் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போது வங்குரோத்து நிலையை அறிவிக்குமாறு நாணய நிதியம் பாகிஸ்தானுக்கு அழுத்தம் பிரயோகித்தது.

நந்தலால் வீரசிங்க போன்று சர்வதேச நாணய நிதியத்துக்கு ஆதரவானவர்கள் பாகிஸ்தானில் இல்லாத காரணத்தால் பாகிஸ்தான் வங்குரோத்து நிலையை அறிவிக்கவில்லை.

வங்குரோத்து என்று அறிவித்தால் சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கு ஏற்ப ஆட வேண்டும் என்பதை பாகிஸ்தான் நன்கு அறிந்திருந்தது என அவர் தெரிவித்தார். (நி-6)

## பட்டாசு விற்பனையில் வீழ்ச்சி

(கொழும்பு)

சிங்கள, தமிழ் புத்தாண்டு காலம், கிறிஸ்மஸ் பண்டிகை காலம், புது வருட காலம் மற்றும் தேர்தல் காலங்களில் பட்டாசுகளுக்கு கேள்வி அதிகரிக்கும்.

இந்நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சூழ்நிலை காரணமாக இந்த வருடம் கிறிஸ்மஸ் பண்டிகை காலத்தில் பட்டாசுகளுக்கு குறைந்த அளவு கேள்வியே உள்ளதாகவும் இதன் காரணமாக தமது தொழில் மற்றும் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பட்டாசு தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

நீர்கொழும்பு கிம்புளாபிட்டிய பிரதேசம் பட்டாசு தயாரிப்புக்கு பிரசித்தமானது. இங்கு வாழும் பெரும்பாலான மக்கள் பட்டாசு தயாரிப்பதிலும் விற்பனை செய்து வருவதிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பேருந்துக் கட்டணங்கள் அதிகரிக்க வாய்ப்பு

(கொழும்பு)

"வற் வரி அதிகரிப்புக் காரணமாக எதிர்வரும் ஜனவரி மாதம் பேருந்துக் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படலாம்" என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கருத்துத் தெரிவிக்கையில் "நாட்டில் உதிரிப்பாகங்களின் விலை, எண்ணெய் விலை, சேவைக் கட்டணங்கள் அனைத்தும் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக 18% வற் வரி அதிகரிப்பால் பேருந்தின் இறக்குமதிக்கு சுமார் 1 கோடியே 77 இலட்சம் வரை அதிகரிக்கப்படும் வாய்ப்பு உள்ளது.

அதுமட்டுமல்லாது வற் வரி அதிகரிப்பினால் டீசல் விலையும் அதிகரிக்கப்பட வுள்ளது. இதனால் பேருந்துக் கட்டணமும் உயர்வடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

மக்கள் பாரிய சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எனவே விரைவில் ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சின் அதிகாரிகளுடன் இது குறித்து ஆலோசிக்க எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## அதிகரிக்கப்படவுள்ள சமையல் எரிவாயு விலை

(கொழும்பு)

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வற் எனப்படும் பெறுமதி சேர் வரியை 18 சதவீதமாக அதிகரித்ததன் பின்னர், லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை கணிசமாக உயர்வடையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை அதிகரிக்கப்படும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-6)

## இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்க அமெரிக்கா தயார்

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது விரிவாக்கப்பட்ட நிதி வசதி மீளாய்வுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் அனுமதியை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

இதனடிப்படையில், பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைகளுக்கு ஆதரவாக இலங்கைக்கு சுமார் 337 மில்லியன் டொலர் கிடைக்கும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்த முக்கியமான நடவடிக்கை மூலம், நாட்டின் நீடித்த சீர்திருத்தங்களின் தொடர்ச்சியான முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது என அவர் கூறியுள்ளார். இந்தநிலையில் இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் மறுமலர்ச்சிக்கான பாதைக்கு அமெரிக்கா தொடர்ந்து தமது ஆதரவை வழங்கும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## தொலைபேசி விலைகளும் கடுமையாக அதிகரிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் வற்வரி நிறைவேற்றப்பட்டதன் மூலம், ஜனவரி மாதம் முதல் தொலைபேசிகளின் விலை வேகமாக உயரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. வற் அதிகரிப்புடன் இந்த நாட்களில் தொலைபேசி விலைகள் ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

18% வரி சேர்க்கப்படும் போது, அதற்கேற்ப தொலைபேசிகளின் விலையும் உயரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கொவிட் காலம் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக தொலைபேசிகளின் விலை கடுமையாக அதிகரித்துள்ளது. அடுத்த ஆண்டு முதல் விலை மேலும் அதிகரிக்கலாம் என தொலைபேசி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# ரசல் களத்தில் அதிரடி மேற்கிந்திய தீவுகள் வெற்றி




இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் இருபது-20 போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பார்படாஸின் கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் நடந்த குறித்த போட்டியில் இங்கிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதின.

முதலில் பட்டிங் செய்த இங்கிலாந்து அணியில் சால்ட் அதிரடியாக 40, கப்டன்பட்லர் 39 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்த போதிலும் மறுமுனையில் 2 சிக்சரை அதிரடி காட்டிய லிவிங்ஸ்டன் 27 ஓட்டங்களில் ரசல் பந்தில் போல்டு ஆனார்.

இறுதியில் இங்கிலாந்து 19.3 ஓவரில் 171 ஓட்டங்களுக்கு ஓல் அவுட் ஆனது. ஆந்த்ரே ரசல், அல்சரி ஜோசப் தலா 3 விக்கெட்டுகளும் ஷெபர்ட் 2 விக்கெட்டுகளும் கைப்பற்றினர்.

அதன் பின்னர் ஆடிய மேற்கிந்திய தீவுகள் அணியில் தொடக்கத்திலேயே கிங் (22), மேயர்ஸ் (35) அதிரடியில் மிரட்டினர்.

நிதானமாக ஆடிய ஷாய் ஹோப் 30 பந்துகளில் 36 ஓட்டங்கள் எடுத்து அவுட் ஆனார்.

மிடில் ஓவரில் கைகோர்த்த ரோவ்மன் பௌல், ஆந்த்ரே ரசல் கூட்டணி இங்கிலாந்து பந்துவீச்சை அடித்து நொறுக்கியது.

மேற்கிந்திய தீவுகள் அணி 18.1 ஓவரிலேயே வெற்றி பெற்றது. பௌல் 31, ரசல் 29 ஓட்டங்களும் விளாசினர். (5-6)

# ஐ.பி.எல் போட்டியில் விளையாட கவனம் செலுத்தும் ரிஷப் பண்ட்




அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல் போட்டியில் ரிஷப் பண்ட் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணியின் முன்னணி பட்ஸ்மேன்களில் ஒருவர் ரிஷப் பண்ட். விக்கெட் கீப்பரான இவர் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கார் விபத்தில் சிக்கினார். இதன் காரணமாக அவர் கடந்த ஆண்டு ஐ.பி.எல் மற்றும் சர்வதேச போட்டிகளில் விளையாடவில்லை.

விபத்தில் ஏற்பட்ட காயத்தில் இருந்து ரிஷப்பண்ட் முழுமையாக குணமடைந்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதத்தில் அவர் முழு உடல்தகுதி பெற்றார். ஆனாலும் அவர் உடனடியாக கிரிக்கெட்டுக்கு திரும்பவில்லை.

டில்லி அணி கப்டன் பதவி குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை. ரிஷப் பண்ட் விளையாடும் பட்சத்தில் டில்லி அணி பட்டிங்கில் பலம் பெறும். அவர் சிறந்த அதிரடி பட்ஸ்மேன் ஆவார்.

அடுத்த ஐ.பி.எல் போட்டிக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் 19ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (நி-6)

# உள்ளூர் டெஸ்ட்; அசத்தும் அவிஷ்கா




மேஜர் கிளப் லீக் தொடரில் சிங்களீஷ் ஸ்போர்ட்ஸ் கிளப் அணிக்காக அவிஷ்கா பெர்னாண்டோ சதம் விளாசி அசத்தியுள்ளார்.

பொலிஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் மற்றும் சிங்களீஷ் ஸ்போர்ட்ஸ் கிளப் கொழும்பில் நடந்து வருகிறது. இதில் பொலிஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் அணி நாணய சுழற்சியில் வென்று பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

அதன்படி களமிறங்கிய சிங்களீஷ் அணியில் ஷெவோன் டேனியல் 56 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து அவிஷ்கா பெர்னாண்டோ மற்றும் கப்டன் நிபுன் தனஞ்செய கூட்டணி அமைத்தனர்.

இவர்களது பார்ட்னர்ஷிப் மூலம் அணி 200 ஓட்டங்களைக் கடந்தது. அவிஷ்கா சதம் விளாசிய பின்னர் 107 ரன்களில் ஆட்டமிழந்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம் காரணமாக கடவுச்சீட்டு பெறுகை பாதிப்பு



(கொழும்பு)

குடிவரவு மற்றும் குடிய கல்வு திணைக்களத்தின் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தென்னிலங்கை செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பணியாளர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் மேலதிக கட்டுப்பாட்டாளர் நாயகத்தை நீக்குமாறு கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் காரணமாக கடவுச்சீட்டு பெறுகை உள்ளிட்ட சேவைகளுக்காக வருகை தந்திருந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

# 2024 இல் நாட்டின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையும்

(கொழும்பு)

எதிர்வரும் "2024 ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையும் என்பதுடன் மக்களின் துன்பங்கள் அதிகரிக்கும் ஆண்டாக இருக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் மக்கள் பல நிவாரணங்களை எதிர் பார்த்துள்ளதாகவும் ஆனால் மக்களின் நம்பிக்கைகள் உடைக்கப்பட்டுள்ளதாகவும் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

வற் வரி தொடர்பில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் இணக்கமாக இல்லை எனவும் அது தொடர்பில் அரசாங்கம் இரட்டைக் கொள்கையைக் கடைப் பிடிப்பதாகவும் வற் வரியை 18 வீதமாக அதிகரிப்பதன் மூலம் 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கு பின்னர் ஒவ்வொரு லீற்றர் எரிபொருளும் 60 முதல் 70 ரூபாவினால் அதிகரிக்கப்படும் எனவும் அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்குமெனவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் தவணைகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், அந்த கடன் தவணைகளை பெற்றுக்கொண்டு மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்கேற்ப அரசாங்கம் வரிகளை அதிகரித்து மக்களை ஒடுக்கியுள்ளது.



மக்களிடமிருந்து வரவு-செலவுத் திட்ட வருமானத்தை வசூலிப்பதற்காக அரசாங்கம் வற் வரியை 18 சத்வீதமாக உயர்த்தியது. அது பற்றி பேசுவதற்கு எதிர்க்கட்சிகளுக்கு அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்கவில்லை.

வங்கிகளில் கோடிக்கணக்கில் கடன் வாங்கி வைத்திருக்கும் குட்டித் தொழிலதிபர்களிடம் வரியைவசூலிக்காமல், சாமானிய மக்களிடம் வரி வசூலிக்க அரசு முயற்சிக்கிறது எனவும் தெரிவித்தார். (நி-6)

# டொலரின் பெறுமதியில் திடீர் மாற்றம்

(கொழும்பு)

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி, 322 ரூபாய் 23 சதமாக பதிவாகியுள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று வீத அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 321 ரூபாய் 77 சதமாக காணப்பட்டது.

அத்துடன், அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி 331 ரூபாய் 47 சதமாக பதிவாகியுள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி 331 ரூபாய் 61 சதமாக காணப்பட்டது. (நி-6)

# தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகாரசபைக்கு சுகாதார அமைச்சர் திடீர் விஜயம்

(கொழும்பு)

தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகாரசபை மற்றும் தேசிய மருந்து தர பாதுகாப்பு ஆணையகம் என்பவற்றை கண்காணிப்பதற்காக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண திடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது பௌதீக மற்றும் மனித வளங்களை மேம்படுத்துவதற்காக துரித நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.



தேவைக்கேற்ப பணியாளர் திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் அதிகாரசபையின் மனித வள மேம்பாட்டிற்கு உரிய கவனம் செலுத்துமாறும், அதிகாரசபையின் வேலைப்பளுவுக்கு ஏற்றவாறு பதவி நிலைகளுக்கு அனுமதி வழங்குமாறும் குறிப்பிட்டார். (நி-6)

# இராசிபலன்

15.12.2023
கார்த்திகை 29, வெள்ளிக்கிழமை
திருதியை பின்னிரவு 1.20 மணிவரை

பூராடம் முற்பகல் 10.44 மணிவரை
சுபநேரம் -6.21-7.51 மணிவரை
இராகு காலம்-10.51-12.21 மணிவரை

சந்திராஷ்டமம்
மிருகசீரிடம்,
திருவாதிரை.

வளவன்



மேஷம்

ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம்.



ரிஷபம்

உறவினர்களிடம் பேசும் போது கவனம் தேவை, வரவு வருவதற்கு முன்பே செலவுகள் காத்திருக்கும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.



மிதுனம்

புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.



கடகம்

தொழில் வியாபாரம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியமான நாள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.



சிம்மம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பிள்ளைகள் வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.



கன்னி

சுபநிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாகன சுகத்தால் வளம் காணும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.



துலாம்

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.



விருச்சிகம்

குடும்பத்தினர்களின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், சுப காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், வாக்கு மேன்மையுண்டு.



தனுசு

எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, உடல் நலன் சீராகி உற்சாகப்படுத்தும், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.



மகரம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



கும்பம்

விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த தனவரவு கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.



மீனம்

முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்

உலகத்திற்கு வெட்கப்படாதவன் கடவுளுக்குப் பயப்பட மாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்க இந்திய அரசு வழி செய்ய வேண்டும்

## கலாநிதி ஆறு.திருமுருகன்

(யாழ்ப்பாணம்)

**இந்திய அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுத்து இலங்கையில் உள்ள இனப்பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும் என செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.**



நேற்று முன்தினம் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

இந்திய பிரதமர் மற்றும் இந்திய மத்திய அரசின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் இலங்கைத் தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு உடனடியாக நிரந்தர தீர்வு கிடைக்க வழிசெய்ய வேண்டும். இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் கீழ் உருவான வடக்கு- கிழக்கு இணைந்த மாகாணசபை துண்டாடப்பட்டுவிட்டதால் மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்ந்து பிற்போடப்பட்டு வருகிறது.

இலங்கையில் நிரந்தரதீர்வு ஏற்படாத காரணத்தால் தொடர்ந்து தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகிறார்கள். தங்கள் நாட்டிலும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் இன்னும் அகதிகளாக வாழ்கிறார்கள். இந்தியப் பிரதமர் தமிழர்கள் சுயகௌரவத்தோடு வாழக்கூடிய சரியான தீர்வை ஏற்படுத்தித் தாருங்கள்.

இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினையை சீராக தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கே அதிகம் உண்டு. இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்து அகதிகளாக அலைவதைத் தடுப்பதற்கு உடன் ஆவண செய்யுங்கள்.

எந்தவிதமான தீர்வும் தமிழினத்துக்கு கிட்டவில்லை. நீண்டகால அகிம்சைப் போர், ஆயுதப்போர் யாவும் செயலற்ற நிலையில் தீர்வின்றி தமிழினம் தவிக்கிறது. காலத்துக்குக் காலம் இலங்கையில் பதவி ஏற்கும் அரசாங்கம் உடனடி தீர்வு தருவதாக கூறி தொடர்ந்து ஏமாற்றிவருகிறார்கள். இந்தியப் பிரதமர் தமிழ் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களை அழைத்து ஆலோசித்து இலங்கை அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி குறுகிய காலத்தில் நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தித் தருமாறு வேண்டுகிறோம் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. (நி-6)

## கணபதி ஹோமம்

(கரணவாய்)

துன்னாலை ஸ்ரீமிந்திரன் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் பிள்ளையார் பெருங்கதை விரதத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கணபதி ஹோமம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம் பெறவுள்ளது என ஆலய பிரதம குருக்கள் சி.இந்திரராஜக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி-6-60)

## தேர் பவனி

(யாழ்ப்பாணம்)

சமரச சுத்தசன்மார்க்க தர்மசாசனத்தின் இராவனேஸ்வரர் தேர் யாத்திரை இன்று மதியம் 12 மணிக்கு சுரவணை செல்வக் கதிர்காமம் பொன்னித் திருத்தலத்தில் இருந்து செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திற்கு முருக, சிவ பக்தர்களால் சித்திரத் தேர் கொண்டு செல்லப்படவுள்ளது. (நி-6)




# ரூ.4 இலட்சம் பெறுமதியான வாழைகளை நாசம் செய்த யானைகள்

(தருமபுரம்)

முல்லைத்தீவு மாவட்ட உடையார்கட்டு கமநல சேவை பிரிவிற்குட்பட்ட விசுவமடு தொட்டியடி மேற்கு பகுதியில் நேற்று வாழை தோட்டத்திற்குள் புகுந்த 4 யானைகளால் விலை மதிப்பான கப்பல் வாழை மரங்களை நாசம் செய்துள்ளன.



நேற்று இரவு தோட்டத்துக்குள் புகுந்த 4 யானைகள் வாழை மரங்களை சேதப்படுத்தியுள்ளன.

குறித்த சம்பவத்தில் 4 இலட்சம் ரூபாய் தமக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் போன வருடமும் இதே போன்ற அழிவை சந்தித்துள்ளதாகவும் குறித்த காணி உரிமையாளர் கவலை தெரிவித்துள்ளார். (நி-6-316)



இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ். கலாசார மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் "அமரா" எனும் இந்திய இதிகாச சிற்பங்களின் சிறப்பினை சித்தரிக்கும் நாட்டிய நாடகத்தில் இந்திய, இலங்கை மற்றும் சிங்கப்பூர் கலைஞர்கள் பங்கேற்றிருந்தனர். (படம்- சிவசாந்தன்)

# காரைநகரில் கைதான மீனவர்களுக்கு விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 6 தமிழக கடற்றொழிலாளர்களையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த போது நேற்று முன்தினம் கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களின் படகும் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்டுள்ளவர்களை காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்று விசாரணைகள் முன்னெடுத்த பின்னர் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் ஊடாக, ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டதை அடுத்து . கடற்றொழிலாளர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (நி-6-33)

# தீக்கிரையான 3 கடைகள் பொருட்கள் எரிந்து நாசம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மீசாலை இராமாவில் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தால் மூன்று கடைகளைக் கொண்ட பலசரக்கு வியாபார கடைத் தொகுதி தீக்கிரையாகியுள்ளதுடன் பல இலட்சம் பெறுமதியான பொருட்களும் எரிந்து நாசமாகியுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 10:45 மணியளவில் ஏற்பட்டுள்ளது.



இதனால் கடைத்தொகுதியில் இருந்த பொருட்கள் அனைத்தும் தீக்கிரையாக்கி உள்ளன.

அதனையடுத்து தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

மின் ஒழுக்கே தீ விபத்துக்கு காரணம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதன் காரணமாக குறித்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஒன்றரை மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்பட்டு இருந்தது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-30-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனவரி முதல் அதிகரிக்கவுள்ள பாடசாலை உபகரணங்களின் விலை

(கொழும்பு)

ஜனவரி முதல் பாடசாலை உபகர ணங்களின் விலை தற்போதைய விலையை விட இரு மடங்காக உயரும் என புத்தகக்கடை உரிமையா ளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, பாடசாலை உபகரணங் களின் விலை கட்டுப்படியாக முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளதாக பெற்றோர்கள் தெரிவித்துள் ளனர்.

இந்நிலையில், கடந்த மாத விலையுடன் ஒப்பிடும் போது அனைத்துப் பாடசாலை உப கரணங்களின் விலைகள் ஏற்கனவே 5 - 15 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# கிளி. மாவட்ட அரசஅதிபருக்கு பெண்தலைமைத்துவ விருது

(முறிகண்டி)

"முன்மாதிரியான பெண் தலைமைத்துவத்திற்கான விருது" கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனுக்கு கிடைத் துள்ளது.

Women Icon Times Women மற்றும் world Women Council உடன் இணைந்து வழங்கிய குறி த்த விருதை மாவட்ட அரசா ங்க அதிபர் பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் நியூ யோர்க்கை தளமாக கொண்டு இயங்கிவரும் Women Icon அமைப் பானது தங்களின் சொந்த வாழ்க்கையில் சாதித்த பெண்களின் திறமையை சிறப்பிக்கும் வகையில் விருதினை வழங்கி வரு கின்றமை குறிப்பிடத்தக் கது.



(நி-6-100-316)

## மகிந்தவிடம் இமாலய பிரகடனத்தை சமர்ப்பித்த உலகத் தமிழ் பேரவை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் உலகத் தமிழ் பேரவை இமாலய பிரகடனத்தை சமர்ப்பித்துள்ளது.

உலகத் தமிழ் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் உள்ளிட்ட பௌத்த பிக்குகள் அடங்கிய குழு வினர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரை யாடினர்.

இதன் பின்னர் இமாலய பிரக டனத்தை குறித்த குழுவினர் மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தனர்.

இந்த சந்திப்பு உலகத் தமிழ் பேரவையின் வேண்டுகோ ளுக்கு இணங்க முன்னெடுக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜ பக்ஷவின் ஊடகப்பிரிவு தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/கலட்டி மெ.மி.த.க பாடசாலை**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த



**ஜெ:சரணியன்** (165 புள்ளிகள்)



**கோ:சாருஜன்** (146 புள்ளிகள்)

ஆகியோரையும் சிறந்த புள்ளிகளைப் பெற்ற பி.பிரிவக்சன், வெ.சகிஸ்னுராம் ஆகிய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இம்மாணவர்களுக்கு கல்வி கற்பித்து அவர்களை சிறந்த பெறுபேறுகளை அடையவைத்த ஆசிரியை திருமதி. ச.சிறினிவாசன் அவர்களையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(இ)

**வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம், யா/கலட்டி மெ.மி.த.க பாடசாலை.**


## விற்பனைக்கு




**KORD, KORA**

**அச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு**

**தொடர்புகளுக்கு**

**076 097 3121**


## கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி பழையமாணவர் சங்க பொதுக்கூட்டமும்- புதிய நிர்வாகத் தெரிவும்

**காலம்: 30.12.2023 (சனிக்கிழமை)**

**நேரம்: மு.ப 9.00 மணி**

**இடம்: பிரதான மண்டபம்**

**தலைமை: திருமதி. இந்திராகாந்தி கந்தசாமி**

மேற்படி பழையமாணவர் சங்கப்பொதுக்கூட்டத்தில் கலந்து பாடசாலையின் செயற்பாட்டிற்கும், அபிவிருத்திக்கும் ஆக்கபூர்வமான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குவதுடன் வினைத்திறனான செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய புதிய நிர்வாகத் தெரிவினையும் மேற்கொண்டு கல்லூரியின் வளர்ச்சியில் பங்கெடுப்பதற்கு முன்னாள் ஆசிரியர்கள், பழையமாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

(சி-7897)

**தகவல்: பாடசாலைச்சமூகம். கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி.**




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பிரித்தானியாவை அச்சுறுத்தும் 100 நாள் இருமல்

(லண்டன்)

'100-day cough' எனப்படும் புதிய பக்றீரியாத் தொற்றானது பிரித்தானியா முழுவதும் தீவிரமாகப் பரவி வருவதாக சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

விஞ்ஞான ரீதியாக கக்குவான் என அழைக்கப்படும் குறித்த தொற்றானது போர்ட் டெல்லா பெர்டுசிஸ் என்ற பக்றீரியாவால் காற்றுவழியாக பரவுவதாகவும் இத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆரம்ப அறிகுறிகளாக சளி, காய்ச்சல் மற்றும் லேசான இருமல் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தொற்றுக் காரணமாக சுமார் 100 நாட்கள் அல்லது 10 வாரங்கள் வரை இந்த தொடர்ச்சியான இருமல் காணப்படும் எனவும் நோய் பாதிப்பு தீவிரமடையும் போது வாந்தி, சோர்வு, மற்றும் விலா எலும்புகள் உடையும் அளவு வலி ஏற்படலாம் எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த தொற்றுப் பரவலானது தீவிரமடைந்து வரும் நிலையில் பிரித்தானிய மக்களை அவதானமாக இருக்குமாறும் முகக் கவசங்களைப் பயன்படுத்துமாறும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (நி-6)

## மௌனராகம் 'மிஸ்ரர் சந்திரமௌலி' சங்கரன் காலமானார்



(டில்லி)

மௌனராகம் திரைப் படத்தில் மிஸ்டர் சந்திர மௌலியாக புகழ்பெற்ற நடிகரும் இயக்குநருமான ரா.சங்கரன் உடல் நலக்குறைவால் நேற்று சென்னையில் காலமானார்.

1974இல் 'ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணு' திரைப் படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான அவர் தேன் சிந்துதே வானம், துர்காதேவி, தூண்டில் மீன் உள்ளிட்ட 8 திரைப்படங்களை இயக்கியுள்ளார்.

பொண்டாட்டி தேவை, தாயம்மா, சின்ன கவுண்டர், அமராவதி, சதி லீலாவதி, காதல் கோட்டை உள்ளிட்ட 40இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்திருக்கிறார்.

குறிப்பாக, மணிரத்னம் இயக்கத்தில் வெளியான மௌனராகம் படத்தில் நடிகை ரேவதியின் அப்பாவாக சந்திர மௌலி என்கிற கதாபாத்திரத்தில் நடித்திருப்பார். நாயகனான கார்த்தி, 'மிஸ்டர் சந்திர மௌலி' என அவரைக் கூப்பிடும் காட்சி மிகப் பிரபலம்.

சில நாட்களாகவே உடல் நலக்குறைவால் அவதிப்பட்டு வந்தவர் நேற்று காலமானார். அவரின் மறைவுக்கு தமிழ்த் திரையுலகினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். (நி-6)

## ஜெனிவா பயணத்தை ரத்து செய்த ஈரான் ஜனாதிபதி



(தெஹ்ரான்)

சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் உலகளாவிய அகதிகள் மன்றம் என்னும் உலகத் தலைவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இருந்த ஈரான் ஜனாதிபதி, திடீரென தனது பயணத்தை ரத்து செய்துள்ளார்.

உலகத் தலைவர்கள் பலர் பங்கேற்கும் அந்த நிகழ்ச்சியில், ஈரான் சார்பில் கலந்து கொள்ளும் குழுவின் தலைவராக, ஈரான் ஜனாதிபதியான இப்ராஹிம் ரைசி ஜெனிவா செல்ல திட்டமிட்டிருந்தார்.

எனினும் அவர் திடீரென தனது பயணத்தை ரத்து செய்துவிட்டார். அதற்குக் காரணம், ஈரான் ஜனாதிபதியான இப்ராஹிம் ரைசியைக் கைது செய்ய அவரது எதிரணியைச் சேர்ந்த மூன்று பேர் சுவிஸ் அட்டர்னி ஜெனரலிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

ஆகவே, இப்ராஹிம் ரைசி ஜெனிவா செல்லும் நிலையில் கைது செய்யப்படலாம் என்பதாலேயே, அவர் திடீரென தனது பயணத்தை ரத்து செய்து விட்டதாக கருதப்படுகிறது.

இப்ராஹிம் ரைசி ஈரானின் டெஹ்ரான் மாகாண அரசின் துணைத்தலைவராக இருந்த போது, இனப்படுகொலை மற்றும் மனித இனத்துக்கெதிரான குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக அவர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## உலகின் வயதான பெண் மரணம்

(டோக்கியோ)

உலகின் மிகவும் வயதான ஜப்பானைச் சேர்ந்த பெண் மணி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

1907 ஆம் ஆண்டு பிறந்த இவர் உலகின் இரண்டாவது வயது கூடிய பெண் என அறியப்பட்ட இவர் அ[illegible] ருக்கு மிகவும் பிடித்த உ[illegible] வான பீன்ஸ் பேஸ்டை உட்கொண்ட பின் உயிரிழந்துள்ளார்.

ஃபுசா தட்சுமி என்ற 116 வயது பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வரலாற்றில் 116 வயதை எட்டிய 27 ஆவது நபர் இவர் என்பதோடு ஜப்பா[illegible] நபரும் ஆவார். (நி-6)

## இந்திய குடியரசு தின விழாவில் ஜோ பைடன் பங்கேற்பாரா?

(வோஷிங்டன்)

இந்திய குடியரசு தின விழாவில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தலைமை விருந்தினராக பங்கேற்க வாய்ப்பில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய குடியரசு தின விழாவில் (2024) தலைமை விருந்தினராகப் பங்கேற்க வருமாறு ஜோ பைடனுக்கு, பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார். எனவே, அவர் இந்தியாவுக்கு வர வாய்ப்புள்ளதாக கடந்த செப்டெம்பரில் இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் எரிக் கார்செட்டி தெரிவித்தார்.

ஆனால், ஜோ பைடனின் இந்தியப் பயணம் குறித்து வெள்ளை மாளிகை தரப்பில் உறுதியான தகவல் எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில், 2024 ஆம் ஆண்டு பிற்பகுதியில் இந்தியாவில் க்வாட் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்க ஜோ பைடன் இந்தியாவுக்கு வருவார் என்று அமெரிக்க அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

'க்வாட்' உச்சி மாநாடு திகதி இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

உறுப்பு நாடுகள் அனைத்தும் ஆலோசனை நடத்தி திகதி இறுதி செய்யப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகியவை 'க்வாட்' கூட்டமைப்பில் உள்ளன.

இந்திய, பசிபிக் பெருங்கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் க்வாட் கூட்டமைப்பு செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## தனது கல்லறைக்கான இடத்தை அறிவித்த போப் பிரான்சிஸ்



(வத்திக்கான்)

"ரோம் நகரில் உள்ள சான்டா மரியா மேகியோர் பசிலிக்காவில் எனது உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் என விரும்புகிறேன்" என போப் பிரான்சிஸ் அறிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வத்திக்கான் அதிகாரபூர்வ ஊடக தகவலின்படி, இதுவரை போப் பதவி வகித்த 7 பேரின் கல்லறைகள் வத்திக்கான் நகரில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவிலேயே கட்டப்பட்டுள்ளன.

ஆனால், அங்கு தனக்கான கல்லறை அமைக்கப்பட விரும்பாமல், சான்டா மரியா மேகியார் பசிலிக்காவில் தனது கல்லறை அமைக்கப்பட வேண்டும் என தான் விரும்புவதாக 87 வயதான போப் பிரான்சிஸ் கூறியிருப்பது பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

போப் பிரான்சிஸ் அந்தப் பேட்டியில், ரோமில் உள்ள நான்கு போப்பாண்டவர் தேவாலயங்களில் சான்டா மரியா மேகியோர் தேவாலயமும் (பசிலிக்கா) ஒன்று. இந்த தேவாலயத்துக்கும் தனக்கும் இடையே நெருங்கி தொடர்பு இருப்பதாக உணர்வதாகவும் கூறியுள்ளார்.

தான் போப் பதவியில் அமர்வதற்கு முன்னர் ரோம் நகருக்குச் செல்கிற போதெல்லாம் வார இறுதி நாட்களில் சான்டா மரியா மேகியோர் தேவாலயத்துக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்ததாகவும் இதன் போது தெரிவித்தார்.

போப் பிரான்சிஸின் கல்லறை பற்றிய அறிவிப்பின்படி, நூற்றாண்டுகளுக்குப் பின்னர், வத்திக்கான் நகருக்கு வெளியே அடக்கம் செய்யப்படும் முதல் போப்பாண்டவர் இவர் என்பது வரலாற்றுப் பதிவாகிறது.

நூற்றாண்டுகளுக்கு முன்னர் போப் 8ஆம் லியோ 1903இல் வத்திக்கான் செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவில் அல்லாமல் நகருக்கு வெளியே, ரோமில் உள்ள செய்ன்ட் ஜோன் பசிலிக்காவில் அடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ஆதரவு இல்லாவிடினும் போர் தொடரும் - இஸ்ரேல்

(ஜெருசலேம்)

**சர்வதேச நாடுகளின் ஆதரவு இல்லாவிட்டாலும் போர் தொடரும் என இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் எலி கோஹன் தெரிவித்துள்ளார்.**



மேலும், "தற்போதைய ...லையில் போர் நிறுத்தம் ஹமாஸ் பயங்கரவாத அமைப்பி னருக்குப் பரிசு போன்று அமைந் துவிடும். திரும்ப வந்து இஸ்ரேல் மக்களுக்கு மிரட்டல் கொடுக்க அனுமதித்துவிடும்" என அவர் சுட்டிக்காட்டினார்.

இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய தால், ஹமாஸ் அமைப் பினருக்கு எதிராக இஸ்ரேல் போர்ப் பிரகடனம் செய்து காசா மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தத் தாக்குதல் இரண்டு மாதங்களைக் கடந்து 3 ஆவது மாதமாக நடைபெற்று வருகிறது.

வடக்குக் காசாவை முற் றிலும் சீர்குலைத்துள்ளது. தெற்குக் காசாவில் உள்ள கான் யூனிஸ் பகுதிகளிலும் தாக்குதல் நடத்தப்பட்டு வரு கிறது.

ஹமாஸ் அமைப்பி னரை முற்றிலும் ஒழிக்கும் வரை போர் ஓயாது என இஸ்ரேல் தெரிவித்துள் ளது.

அமெரிக்கா தொடக்கத் தில் இருந்தே இஸ்ரேலுக்கு ஆதரவாக இருந்து வரு கிறது. தற்போது பாலஸ்தீன மக்கள் மனிதாபிமான உதவிகள் கிடைக்காமல் திண்டாடி வருகின்றனர். மேலும், பணயக்கைதிகள் முழுமையாக மீட்கப்படா மல் உள்ளனர்.

இதனால் உலக நாடுகள் போர் நிறுத்தம் தேவை என வலியுறுத்தி வருகின்றனர். ஐ.நா சபையில் 153 நாடுகள் போர் நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்துள் ளனர்.

அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் போர் நிறுத்தம் தேவை என இஸ் ரேலுக்கு தொடர்ந்து அழுத் தம் கொடுத்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# உலகின் ஆதரவை இழக்கத் தொடங்கியுள்ள இஸ்ரேல்

## ஜோ பைடன் சுட்டிக்காட்டு



(வோஷிங்டன்)

காசா மீதான கண்மூடித் ...மான குண்டுவீச்சு கார ...மாக இஸ்ரேல் அமெரிக் ...வின் ஆதரவை இழக்க ...டங்கியுள்ளது என அமெ ரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரி வித்துள்ளார்.

ஒக்டோபர் ஏழாம் திகதிக்கு பின்னர் இஸ்ரேலிற்கு எதிராக ஜோ பைடன் முன்வைத்துள்ள கடும் குற்றச்சாட்டு இது என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் பாதுகாப்பு விடயத் தில் அமெரிக்காவை நம்பியிருக்க லாம். ஆனால் தற்போது அது அமெரிக்காவையும் தாண்டிய விடயம். ஐரோப்பிய ஒன்றியமும் முழு உலகமும் இஸ்ரேலிற்கு ஆதரவளிக்கின்றது என தெரிவித் துள்ள பைடன் எனினும் கண் மூடித்தனமான குண்டுவீச்சு கார ணமாக இஸ்ரேல் உலகின் ஆதரவை இழக்கத் தொடங்கியுள் ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இஸ்ரேல் ஹமா ஸிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்து எந்த கேள்வியும் இல்லை எனவும் தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி அதற்கான முழு உரிமையும் இஸ்ரேலிற்குள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (நி-6)

# குழந்தைகள் மருத்துவமனையை குறிவைத்து ரஷ்யா தாக்குதல்



(மொஸ்கோ)

உக்ரைனிய தலைநகரை குறிவைத்து ரஷ்ய ஏவு கணைத் தாக்குதலில் கீவ் வின் டினிப்ரோவ்ஸ்கி மாவட் டத்தில் உள்ள குழந்தைகள் மருத்துவமனை சேதப்படுத் தப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதலில் ஆறு குழந்தைகள் உட்பட குறைந் தது 51 பேர் காயமடைந்த னர் என்று கீவ்வின் இரா ணுவ நிர்வாகத்தின் தலை வர் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் வான் பாது காப்பு அமைப்புகள் தலை நகரை குறிவைத்து 10 பாலிஸ் டிக் ஏவுகணைகளையும் அதிகாலை 3 மணியளவில் வீழ்த்தியதாக உக்ரைனின் விமானப்படை டெலிகிராமில் தெரிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைத்தல், மதுபாவனையால்

# நாளாந்தம் 40 பேர் உயிரிழப்பு

## மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**நாட்டில் புகைத்தல் மற்றும் மதுசாரப் பாவனை காரணமாக நாளாந்தம் 40 பேர் உயிரிழப்பதாக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.**



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அதன் பணிப்பாளர் சம்பத் டி சேரம் இதனைத் தெரிவித்தார்.

அதேநேரம் மதுசார பாவனை எமது நாட்டிற்கு பெரும் சுமையாக மாறியுள் ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மதுபான நிலையங்களை திறக்கும் காலத்தை அதிகரிப்பதன் ஊடாக விப த்து மற்றும் குற்றச் செயல் கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகளவில் காணப்படுகின்றன.

சுற்றுலாத்துறை வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அரசாங்கம் தெரிவித்தாலும் இது மதுசாரம் உற்பத்தி மற்றும் விநியோக நிறுவனங்களின் மறைமுக விளம்பர நோக்காகக் காணப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த 2022ஆம் ஆண்டு அரசாங்கத்திற்குக் கிடைக்கப் பெற்ற மதுசார வரித் தொகை 165.2 பில்லியன் ரூபாவாகும்.

இருப்பினும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி திட்டத்தினால் நடத்தப்பட்ட ஆய் வின் அடிப்படையில் மதுசார பாவனை காரணமாக அரசாங்கத்திற்கு 237 பில்லியன் ரூபாய் சுகாதாரம் மற்றும் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதுசாரம் ம்ற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்தின் பணிப்பாளர் சம்பத் டி சேரம் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 600 | 400 | 350 | 480 |
| உருளைக்கிழங்கு | 250 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 1200 | 1300 | 1000 | 1000 |
| தக்காளி | 700 | 550 | 550 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| கோவா | 400 | 400 | 400 | 480 |
| கரட் | 450 | 400 | 280 | 500 |
| பூசணி | 200 | 180 | 140 | 250 |
| புடோல் | 320 | 250 | 160 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 140 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 450 | 450 | 430 | 480 |
| பாகற்காய் | 600 | — | 600 | 800 |
| வெண்டக்காய் | 300 | 250 | 160 | 320 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 110 | 200 |
| பயற்றங்காய் | 650 | 600 | 400 | 450 |
| லீக்ஸ் | 350 | 350 | 360 | 400 |
| பீற்றூட் | — | 500 | 500 | 600 |
| கறிமிளகாய் | 750 | 700 | 800 | 800 |
| முருங்கைக்காய் | — | 1400 | 1200 | — |
| போஞ்சி | 350 | 500 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 450 | 250 | 300 | 400 |
| கீரை – 1 பிடி | 150 | 150 | 200 | 200 |
| தேசிக்காய் | 800 | 1000 | 550 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 600 | 600 | 450 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 200 | 200 | — | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 200 | 60 |
| வல்லாரை | 100 | 36 | 50 | 80 |
| ஈரப்பலா | 150 | 180 | 120 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2990

### சியாந்




### மகேஷ்




### மீரா




### வதனி




### பிரியா




### அர்னவ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி கடற்றொழிலாளர்கள் கையெழுத்து வேட்டை





(மன்னார்)

ஐந்தம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடற்றொழிலாளர்கள் அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று யாழில் கையெழுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வரைவு கடற்றொழில் சட்டம், இலங்கை கடற்பரப்பில் வெளிநாட்டு கடற்றொழில் கப்பல்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது, கடல் உணவு இறக்குமதியால் உள்ளூர் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது, கடற்றொழில் சமூகத்திற்கு 2024 இற்கான பாதீட்டில் போதிய ஒதுக்கீடு இன்மையையும் பொருத்தமற்ற அரச கொள்கைகளையும் மாற்றியமைத்து கடற்றொழில் வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்பல், இழுவை மடி படகுகளால் பாதிக்கப்படும் கடற்றொழில் சமூகங்களுக்கான தீர்வுகளை முன்னெடுக்க முன்வைக்கப்பட்டதே குறித்த ஐந்தம்சக் கோரிக்கையாகும்.

இலங்கை கடற்றொழிலாளர்களின் நிலைப்பாடு எனும் தலைப்பில் சேகரிக்கப்படும் கையெழுத்துக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இதற்கு ஆதரவாக மன்னாரிலும் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (நி-6-33-285)

## வயோதிபர்களிடம் நகை, பணம் கொள்ளை

(தருமபுரம்)

கத்திமுனையை கழுத்தில் வைத்து முதியவர்களிடம் கொள்ளையில் ஈடுபட்ட கும்பல் தொடர்பிலான சம்பவம் ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் பகுதியில் இரவுவேளை வீட்டின் கதவை தட்டியபோது உள் இருந்தவர்கள் வெளியே வந்த சமயம் குறித்த கொள்ளை இடம்பெற்றுள்ளது.

2 பவுண் நகை, 45 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (நி-6-316)

# அக்கராயன் ஆற்றுப் பகுதியில் அகழப்படும் பெருமளவான மணல்



(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் ஆற்றுப் பகுதியில் இருந்து பெருமளவு மணல் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

இரு ஆண்டுகளுக்கு முன்னர் அக்கராயன் ஆற்றின் 3 கிலோ மீற்றர் வரையான தூரம் துப்புரவு செய்யப்பட்டு பெருமளவு மணல் ஆற்றின் கரையில் குவிக்கப்பட்டன.

கனரக வாகனங்கள் ஆற்றங்கரையில் மணல் அகழ்வில் ஈடுபட முடியாது என்ற சட்டம் உள்ள போதிலும் கனரக வாகனங்கள் மூலம் மணல் அகழ்வதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டு குவிக்கப்பட்டுள்ள மணல் மிகக் குறைந்த விலையில் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து மணல் அகழ்வினைத் தடுக்க வேண்டும் என அக்கராயன் பொதுஅமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (நி-6-350)

# ஒதியமலை பேருந்து சேவையை நடத்த நடவடிக்கை எடுங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒதியமலைக் கிராமத்திற்கு பேருந்து சேவைகள் இடம்பெறாததன் காரணமாக இக்கிராம மக்கள் போக்குவரத்து செய்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இக்கிராமத்தில் 80 வரையான குடும்பங்கள் வாழ்கின்றனர். பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், மருத்துவமனைக்கு செல்லும் மக்கள் நடந்து செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

ஒதியமலைக் கிராமத்திற்கு பேருந்து சேவை நடத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள், ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பல தடவைகள் முடிவு எடுத்தும் பேருந்து சேவைகள் நடைபெறவில்லை.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் குறித்த பேருந்து சேவையினை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (நி-6-350)



முல்லைத்தீவு மாவட்டச் செயலகமும் மாவட்ட விவசாய திணைக்களமும் இணைந்து நடத்திய விவசாய மேன்மை விருது வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படம்:-சதீஸ்)

# சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 7 பேர் கடற்படையினரால் கைது

(மன்னார்)

சிலாவத்துறை கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 7 பேர் கடற்படையினரால் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாவத்துறை கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சிலாவத்துறை கடல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இரவு நீரில் மூழ்கி கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த நிலையில் 7 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.



இதன்போது 2 படகுகள், டைவிங் கருவிகள் மற்றும் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட சுமார் 874 கடல் அட்டைகளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னாரைச் சேர்ந்த 22 வயதுக்கும் 48 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் ஆவர். கைது செய்யப்பட்டவர்களின் உடைமைகள் மற்றும் கடல் அட்டைகள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சிலாவத்துறை கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (நி-6-285)

# ஹோட்டலுக்கு தண்டப்பணம் விதிப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட பரந்தன் பகுதியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றிற்கு நேற்று நீதிமன்ற கட்டளைப்படி பொதுச் சுகாதார அதிகாரிகளால் ஒரு இலட்சம் தண்டப்பணமும் 14 நாட்கள் தற்காலிக தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

கழிவு நீர் சீராக வெளியேறாமை மற்றும் சுகாதார நடைமுறையை பேணாமை ஆகிய குற்றச்சாட்டிற்கு அமைவாக குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (நி-6-316)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன் பாகம் - 2

காவியத் தொடர் 354





கந்தன்மாறன் கொதித்து எழுந்து, "ஐயா! தாங்கள் என் தந்தையின் ஸ்தானத்தில் உள்ளவர். அதனால் தங்களுடைய பரிகாசத்தைப் பொறுத்தேன்!" என்றான்.

"இல்லாவிட்டால், என்ன செய்திருப்பாயடா?" என்று பழுவேட்டரையர் கேட்டுத் தம் உறையிலிருந்த கத்தியில் கையை வைத்தார்.

நந்தினி இச்சமயம் குறுக்கிட்டாள். "நாதா! இவருக்கு முதுகில் மட்டும் காயமில்லை. நெஞ்சிலும் காயம் பட்டிருக்கிறது என்பது தங்களுக்குத் தெரிந்ததுதானே! இவர் தம்முடைய சிநேகிதன் என்று நினைத்துக் கொண்டிருந்தவன் இம்மாதிரி முதுகில் குத்திப் போட்டுவிட்டுப் போய்விட்டான் என்ற எண்ணம் இவர் நெஞ்சில் பெரிய புண்ணை உண்டாக்கியிருக்கிறது. முதுகில் காயம் ஆறியும் நெஞ்சில் புண் ஆறவில்லை. அந்தப் புண்ணில் கோல் இடுவது போல் நாம் பேசக்கூடாது தானே? அன்றிரவு, இவர் காயம்பட்ட அன்றிரவு, என்ன நடந்தது என்று தங்களுக்குத் தெரியாதா, என்ன?" என்று சொல்லிக் கொண்டே நந்தினி பழுவேட்டரையரைப் பார்த்த பார்வையில் மறைபொருள் ஏதோ இருந்திருக்க வேண்டும்! பழுவேட்டரையரின் முகத்தோற்றம் உடனே மாறிவிட்டது!

"ஆமாம் நீ சொல்லுவது சரிதான்! பாவம், இவன் அறியாப் பிள்ளை. இவன் தந்தையோ என் பிராண சிநேகிதர். இவன் ஏதோ தெரியாத்தனமாகக் கூறியதை நான் பொருட்படுத்தக் கூடாது தான். இது கிடக்கட்டும். நந்தினி! ஒரு முக்கியமான விஷயம் சொல்வதற்காக இப்போது வந்தேன். அது இவனுக்கும் தெரிந்திருக்க வேண்டியதுதான். இலங்கை மாதோட்டத்தில் ஒருவனை ஒற்றன் என்று சந்தேகித்துப் பிடித்திருக்கிறார்களாம். அவனிடம் இளவரசன் அருள்மொழிவர்மனுக்கு ஓலை ஒன்றிருக்கிறதாம். அங்க அடையாளங்களிலிருந்து அவன் நம் கந்தன்மாறனுடைய அழகான சிநேகிதனாயிருக்கலாமென்று நினைக்கிறேன். அவன் பெரிய கைகாரனாய்த் தானிருக்க வேண்டும். நம் ஆட்களிடம் அகப்படாமல் தப்பி இலங்கைக்குச் சென்றுவிட்டான் பார்!" என்றார் பழுவேட்டரையர்.

நந்தினியின் முகபாவத்தில் அப்போது ஏற்பட்ட ஒரு கண நேரமாறுதலை மற்ற இருவரும் கவனிக்கவில்லை.

"அடே! தப்பிச்சென்றுவிட்டானா? இலங்கைக்கா போய்விட்டான்?" என்று கந்தன்மாறன் ஏமாற்றத்துடன் கூறினான்.

"நாதா! அவன் தப்பிச் சென்றது எனக்கு ஒன்றும் அதிசயமாய்த் தோன்றவில்லை. தங்கள் சகோதரர் இந்தக் கோட்டைக் காவலுக்குத் தகுதியற்றவர் என்று தான் எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேனே! அவர் அனுப்பிய ஆட்களும் அப்படித்தானே இருப்பார்கள்?" என்றாள் நந்தினி.

"முன்னெல்லாம் நீ அப்படிச் சொன்னபோது எனக்கு அது சரியாகப் படவில்லை. இப்போது எனக்குக்கூட அப்படித்தான் தோன்றுகிறது. இன்னும் ஒரு விந்தையைக் கேள்! மாதோட்டத்தில் அகப்பட்ட ஒற்றனிடம் நமது பழுவூர் இலட்சினை ஒன்று இருந்ததாம். அது அவனிடம் எப்படிக் கிடைத்தது என்று அவன் சொல்லவில்லையாம்!"

நந்தினி இலேசாக ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, "இது என்ன வேடிக்கை? பனை இலட்சினை அவனிடம் எப்படிக் கிடைத்ததாம்? தங்கள் சகோதரர் இதற்கு என்ன சொல்கிறார்?" என்றாள்.

"அவனா? அவன் சொல்லுவதைக் கேட்டால் உனக்குச் சிரிப்பு வரும்! அந்தப் பனை இலட்சினை உன்னிடமிருந்துதான் அவனிடம் போயிருக்க வேண்டுமென்கிறான் காலாந்தகன்!" என்று சொல்லிவிட்டுப் பழுவேட்டரையர் இடிஇடியென்று சிரித்தார். அந்தச் சிரிப்பினால் லதா மண்டபமே குலுங்கியது போலிருந்தது. அரண்மனை நந்தவனத்து மரங்கள் எல்லாம் சிலிர்த்து நடுநடுங்கின.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நெய் டப்பாவில் பொற்காசு



(நேற்றைய தொடர்ச்சி)

"நன்றி. நாளைக்கே உங்கள் கடைக்கு ஒரு டின் அனுப்பி வைக்கிறேன்" என்று சொல்லி விட்டு பீர்பால் அவரை அனுப்பி வைத்தார். மறுநாள், மதுசூதன் வீட்டுக்குச் சென்ற பீர்பால், அஸ்லாம்கானிடம் கூறியது போல் கூறிவிட்டு நெய்யை விற்றுத்தர முடியுமா என்று கேட்டார். மதுசூதனும் அதற்கு ஒப்புக் கொண்டதும் இரண்டு பேர் கடைக்கும் இரண்டு நெய் டின்கள் அனுப்பப்பட்டன.

மறுநாள் பீர்பால் தன் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கையில், மதுசூதன் மூச்சிரைக்க ஓடிவந்தார். "பீர்பால்! நீங்கள் அனுப்பியிருந்த டின்னில் ஒரு பொற்காசு இருந்தது. அதைக் கொடுக்க வந்தேன். நெய் விற்ற பணம் இதோ!" என்று அவர் மொத்தத்தையும் பீர்பாலிடம் தந்தார்.

"அட! நான் அனுப்பிய டின்னில் பொற்காசு இருந்ததா? நான் மிகவும் அதிஷ்டசாலி! நன்றி மதுசூதன்" என்றார் பீர்பால்.

"அதிருக்கட்டும். என்னுடைய வழக்கு என்ன ஆயிற்று?" என்று மதுசூதன் கேட்க, "அதுவா! நான் விசாரணை நடத்திக் கொண்டு இருக்கிறேன். நாளைக்கு முடிவு தெரியும்" என்றார் பீர்பால்.

அடுத்த நாள் பீர்பால் வீட்டுக்கு வந்த அஸ்லாம் "உங்களுடைய நெய் விற்ற பணம் இதோ?!" என்று பணத்தை அளித்தார். அவருக்கு நன்றி தெரிவித்த பின் அவரை உட்காரச் சொல்லிவிட்டு பீர்பால் தன் வேலைக்காரனை அழைத்து அவன் செவிகளில் ரகசியமாக ஏதோ கூறினார். அவர் என்ன கூறினார் என்று அஸ்லாமின் செவிகளில் விழவில்லை. அதைப் பற்றி அவன் பொருட்படுத்தவும் இல்லை.

பீர்பால் தன் வேலைக்காரனிடம் ரகசியமாகக் கூறியது இதுதான்! "நேராக நீ அஸ்லாமின் வீட்டுக்குப் போ. அவருடைய மகனைக் கூப்பிடு. அவனுடைய தந்தை பீர்பாலின் வீட்டிலிருப்பதாக கூறு. பிறகு நெய் டின்னில் இருந்த ஒரு பொற்காசை எடுத்து வர மறந்து விட்டதாகவும் அதை உடனடியாக எடுத்து வரவும் அவன் தந்தை கூறியதாகச் சொல்" என்றார்.

வேலைக்காரனை அஸ்லாமின் வீட்டுக்கு ரகசியமாக அனுப்பியபின், பீர்பால் தன் வரவேற்பறையில் அமர்ந்திருந்த அஸ்லாமிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டு வேண்டும் என்றே காலத்தைக் கடத்தினார்.

சற்று நேரத்தில் அஸ்லாமின் மகனுடன் பீர்பாலின் வேலைக்காரன் திரும்பினான். அந்தச் சிறுவன் அஸ்லாமை நோக்கி ஓடிவந்து, "அப்பா! நீங்கள் எடுத்துவரச் சொன்ன பொற்காசு இதோ! இது நமக்கு நேற்று நெய் டின்னில் கிடைத்தது" என்று உண்மையை உளறிவிட, அஸ்லாம் கோபத்துடன் "அதிகப்பிரசங்கி! உன்னை யார் இங்கே வரச்சொன்னது? நெய் டின்னில் பொற்காசா? நீ என்ன மடத்தனமாய் உளறுகிறாய்?" என்று உண்மையை மறைக்க அரும்பாடுபட்டார்.

"அவனை ஏன் மிரட்டுகிறீர்கள் அஸ்லாம்? பையன் உண்மையைத் தான் கூறுகிறான். நீங்கள் தான் மூடி மறைக்கிறீர்கள். இந்தப் பொற்காசை நான்தான் நெய் டின்னில் வைத்தேன். உங்களை சோதிப்பதற்காகத்தான் அதைச் செய்தேன். இனியும் பொய் பேச முயன்றால் உங்கள் தலை போய் விடும்" என்று பீர்பால் மிரட்ட, அஸ்லாம் உண்மையை ஒப்புக் கொண்டு பொற்காசை பீர்பாலிடம் திருப்பித் தந்தார்.

"சரிதான்! நீங்கள் மதுசூதனிடம் கடன் வாங்கிய 20 முகராக்களையும் இதேபோல் என்னிடம் திருப்பித் தந்து விடுங்கள்" என்றார் பீர்பால். "நான் மதுசூதனிடம் கடன் வாங்கவே இல்லை" என்று அஸ்லாம் பழைய பல்லவியைப் பாட, இதைக் கேட்டதும் பீர்பால் "அஸ்லாம்! இனியும் பொய் பேசினால் உங்களுக்கு தூக்கு தண்டனை நிச்சயம்!" என்று அஸ்லாம்கானை பயமுறுத்த அவன் உண்மையை ஒப்புக் கொண்டு கடனைத் திருப்பிக் கொடுப்பதாகக் கூறி பீர்பாலிடம் மன்னிப்புக் கேட்டு, வாங்கிய கடனை மொத்தமாக திருப்பி அளித்தான். பீர்பாலின் புத்திசாலித்தனத்தை, அக்பர் வெகுவாகப் பாராட்டினார். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது திறமை ஒன்று என்றாலும் அதை ஒளித்து வைத்திருப்பது உன்னையே ஒழிப்பதற்குச் சமமாகும்.
– மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாணவர்களுக்கு நம்பிக்கை தரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்

நம்பிக்கைதான் வாழ்க்கை. அதனால்தான் இறை நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் வளர்க்கப்பட வேண்டும் என்ற சிந்தனை மனித சமூகம் தோன்றிய காலத்தில் இருந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இங்கு இறை நம்பிக்கை என்பது ஒருபுறமிருக்க, தன்னம்பிக்கை பற்றி நாம் ஆராய்ந்தால், தன்னம்பிக்கை இல்லாதவர்கள் ஒருபோதும் வெற்றி பெற்றதாக வரலாறில்லை என்பதை முதற்கண் கூறியாக வேண்டும்.

அதாவது தன்னம்பிக்கையில்தான் வாழ்க்கை இருக்கிறது.

ஆக, ஒவ்வொரு தனிநபரிடமும் தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

தன்னம்பிக்கை ஏற்படும்போதுதான் தனி மனித ஆற்றலும் ஆளுமையும் விருத்தி பெற்று சமூக நிலையில் அவை பிரதிபலிக்கும்.

அந்தவகையில் தனி மனித நம்பிக்கையை வளர்ப்பதில் சமூகக் கட்டமைப்புகள் அதீத பங்காற்றுவது அவசியம்.

ஆம் குடும்பம், பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் சமூக, அரச நிறுவனங்கள் தன்னம்பிக்கையை வளர்ப்பதில் அதிகூடிய பங்காற்ற வேண்டும்.

அப்போதுதான் ஆளுமைமிக்க மக்கள் சமூகம் கட்டியெழுப்பப்படும்.

உதாரணத்துக்கு மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்ப்பதில் பாடசாலைகள் காத்திரமான பங்கை ஆற்ற முடியும்.

படிப்பு, விளையாட்டு, புத்தாக்கம், ஆற்றல் வெளிப்பாடு, தலைமைத்துவம் என்பவற்றினூடாக மாணவர்களின் தன்னம்பிக்கை கட்டியெழுப்பப்படும்போது அதனூடு மாணவர்களின் ஆளுமைதானாகவே விருத்தியடையும்.

ஆம், என்னால் முடியும். ஏதோவொரு துறையில் என்னால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை மாணவர்களிடம் ஏற்பட்டுவிட்டால், அவர்கள் எந்த இடத்திலும் எந்தக் கஷ்டத்திலும் துணிவோடு வாழ்வர்.

அந்த வகையில் எமது தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய அமைப்புகள் மிகக் குறைவு என்று கூறலாம்.

இஃது மிகப்பெரும் குறைபாடாக உள்ளது. எனினும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடம் முன்மாதிரியான ஒரு செயற்பாட்டை ஆரம்பித்திருப்பது மன ஆறுதலைத் தருகிறது.

அதாவது 2023இல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள விஞ்ஞான, கணித, தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கு "விடையளிப்பதில் தவறுகள் ஏற்படுவதை மாணவர்கள் எவ்வாறு தவிர்ப்பது" என்ற விடயப்பொருளில் இணையவழி ஊடாக கருத்தரங்கு நடத்த முன்வந்திருப்பது உண்மையில் பாராட்டப்பட வேண்டியது.

இதுபோல அனைத்து துறைகளிலும் பாடரீதியான கருத்தரங்குகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நடத்தும்போது அது நிச்சயம் மாணவர்களுக்கு பரீட்சையில் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும்.

உண்மை. தென்பகுதியில் உள்ள பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பாடரீதியான விடயங்களை – மாதிரி வினாத்தாள்களை முன்வைத்து கருத்தரங்குகளை நடத்துகின்றனர்.

அதனால் அந்த மாணவர்கள் பரீட்சையில் நிறைவான வெற்றியைப் பெற்றுக் கொள்கின்றனர். அதேவழிப்படுத்தல் இங்கும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்தநிலைமை உருவாகிவிட்டால், மாணவர்களிடம் அசையாத நம்பிக்கை நிச்சயம் உருவாகும்.

# இலகு ரயில் திட்டத்தை ஆரம்பிக்க ஜப்பான் அரசுடன் விரைவில் பேச்சு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

இலகு ரயில் திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பாக ஜப்பான் அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் இன்னும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த திட்டம் விரைவில் மீண்டும் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசுக்கும் ஜப்பான் அரசுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இத்திட்டத்தை மீள் மதிப்பீடு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, இதற்காக செலவிடப்பட்ட தொகை முதல் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது.

எவ்வாறாயினும், இலங்கை அரசு மற்றும் ஜப்பான் அரசுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி அடுத்த வருடத்தில் பொது வசதிகள் இடமாற்றம் மற்றும் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மீண்டும் செயற்படுத்தப்படும் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலகு ரயில் திட்டத்திற்கான ஆரம்ப சாத்தியக்கூறு தொடர்பான ஆய்வு நடத்தப்பட்டது. மாலபே முதல் கோட்டை வரையிலான கட்டுமானம் தொடர்பான விரிவான திட்டங்கள், ஒப்பந்த ஆவணங்கள், ஏல ஆவணங்கள் மதிப்பீடுகள் மற்றும் கண்காணிப்பு சேவைகளை வழங்க சர்வதேச ஆலோசனை நிறுவனம் ஒன்று நியமிக்கப்பட்டதுடன் அதன் அடிப்படை விஷயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 120 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

இலகுரக ரயில் சேவை ரத்து செய்யப்பட்டதால், ஆலோசனை சேவைகளுக்காக நியமிக்கப்பட்ட நிறுவனம் கோரிய சேதங்களை ஆய்வு செய்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முடிவு செய்ய, அமைச்சரவை பேச்சுவார்த்தை குழுவை நியமித்துள்ளது. இதற்கிடையில், JICA நிறுவனம் பெற்ற கடன் தொகையில் இருந்து திட்டத்திற்காக செலுத்த ஒப்புக்கொண்டது. ஆனால், கடன் செயல்படுத்தப்படாததால் பணம் செலுத்தப்படவில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ம-7)

# வற்வரி அதிகரித்தால் பணவீக்கம் உயர்வடையும்

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

வற்வரி அதிகரித்தால் பணவீக்கம் 2 வீதத்தால் அதிகரிக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை கூறினார்.

பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதாக நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

வரிக் கொள்கையை மாற்றாவிட்டால் எதிர்பார்க்கப்படும் அரச வருமானத்தை ஈட்ட முடியாத நிலை ஏற்பட்டிருக்குமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

2024 வரவு செலவுத் திட்டம், பெறுமதி சேர் வரிச் சட்டமூலம் மற்றும் நிதிச்சட்டமூலம் என்பனவற்றுக்கு பாராளுமன்றத்தின் அனுமதி கிடைத்த பின்னர் சபாநாயகர் நேற்று முன்தினம்மாலை கைச்சாத்திட்டு சான்றுபடுத்தினார்.

இம்முறை வரவு செலவுத் திட்டமானது, நாட்டின் வரலாற்றில் பொருளாதாரம்பாரிய பின்னடைவை சந்தித்துள்ள பின்னணியிலேயே முன்வைக்கப்பட்டது.

அரச ஊழியர்களுக்கான சம்பளம், ஓய்வூதிய கொடுப்பனவு, அஸ்வெசும கொடுப்பனவு, கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்காகவும் பாரிய மேலதிக நிதியை இம்முறை வரவு செலவுத் திட்டத்தினூடாக செலவிடுவதற்காக அரசாங்கம் கொள்கையை வகுத்துள்ளது.

அரச ஊழியர்களுக்காக சம்பளத்திற்கு மேலதிகமாக வழங்கப்படும் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 10,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், ஜனவரி மாதம் முதல் இடம்பெற வேண்டிய இந்த கொடுப்பனவு செலுத்துகையானது ஏப்ரல் மாதம் முதல் அமுல்படுத்தப்படவுள்ளது. (ம-7)

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த

# நாட்டு மக்களுக்கு இன்று முக்கிய அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு முக்கிய அறிவிப்பை இன்று வெளியிடுவார் என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

களுத்துறை பகுதியில் நேற்று வியாழக்கிழமை (14) இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் ரீதியில் தோற்றுவித்த நெருக்கடிகளினால் பாரிய விளைவுகளை எதிர்கொண்டோம். அரசியலமைப்பின் ஊடாக தீர்வு கண்டுள்ளோம்.

கோட்டாபய ராஜபக்ஷ இல்லை என்பதற்காக நாங்கள் அரசியலில் ஈடுபட கூடாது என்பதொன்றும் கட்டாயமல்ல.

பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய மாநாடு இன்றைய தினம் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெறவுள்ளது.

ராஜபக்ஷர்களின் மீளெழுச்சியைக் கண்டு எதிர்க்கட்சியினர் அச்சமடைந்துள்ளார்கள். சமூக வலைத்தளங்களில் வெறுக்கத்தக்க வகையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மகிந்த ராஜபக்ஷ மீது நாட்டு மக்கள் இன்றும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். அவரது தலைமைத்துவத்திலான அரசாங்கத்தை கோருகிறார்கள். இன்று தேசிய மாநாட்டில் அவர் முக்கிய செய்தியை நாட்டு மக்களுக்கு வழங்குவார் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# குருநாகல் முன்னாள் மேயருக்கு கடூழியச் சிறைத்தண்டனை

(குருநாகல்)

குருநாகல் முன்னாள் மேயர் துஷார சஞ்சீவ விதாரண உள்ளிட்ட 5 பிரதிவாதிகளுக்கு 3 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்தது குருநாகல் மேல் நீதிமன்றம்.

குருநாகல் நகரின் மைய பகுதியில் அமைந்துள்ள தொல்பொருள் பெறுமதி வாய்ந்த புவனேகபா ராஜ சபை மண்டபத்துடன் கூடிய கட்டிடத்தை இடித்து அகற்றியமை தொடர்பில் இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 9.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** அழகல்ல (தீருவேகம), அளுத்கம, கல்குண்டாமடு ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

14



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இவ்வழக்கின் முறைப்பாட்டாளரான நயனா குமாரி என்பவருக்கு வீதிச்சான்றிதழை வழங்குவதற்கு முதலாவது குற்றவாளியினால் ரூபா 500,000.00 கோரப்பட்டு அதில் ரூபா 400,000.00 இனை இரண்டாவது குற்றவாளியின் மூலம் பெற்றுக் கொண்டமைக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதுடன் குறித்த வழக்கினை ஆணைக்குழுவின் சார்பில் திருமதி. அநுராதா சிரிவர்தன (உதவிப்பணிப்பாளர் சட்டம்) முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

**10. இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் மாத்தளை மாவட்ட தொழில் திணைக்கள அலுவலருக்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு (2019)**

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்தின் அடிப்படையில் மாத்தளை மாவட்ட தொழிலாளர் திணைக்கள அலுவலகத்தில் தொழில் அலுவலராக சேவை புரிந்த குற்றஞ்சாட்டப்பட்டவர் முறைப்பாட்டாளர் தனது கராஜில் பணிபுரியும் ஊழியர்களுக்கு EPF கட்டணத்தை செலுத்தாமலிருக்க உதவும் வகையில் முறைப்பாட்டாளருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு அவரிடமிருந்து ரூ. 150,000.00 இலஞ்சமாக கோரிப் பெற்றுக் கொண்ட போது ஆணைக்குழுவின் சுற்றிவளைப்புப்பிரிவினால் கைது செய்யப்பட்டு மேற்படி குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மேல்நீதிமன்ற நீதிபதி திரு மஞ்சுல திலகரட்ன குறித்த குற்றவாளிக்கெதிரான நான்கு குற்றச்சாட்டுக்களுக்கும் குற்றஞ்சாட்டி 21.05.2019 அன்று 4 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். மற்றும் இலஞ்ச சட்டத்தின் பிரிவு 26 இன் பிரகாரம் ரூபா 150,000.00 தண்டம். தண்டப் பணத்தை செலுத்தத் தவறின் 6 மாத சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

**11. ஊழல் வழக்கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்ட மாத்தளையின் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிக்கு 3 வருட சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பு (2019)**

குற்றஞ்சாட்டப்பட்டவர்: எஸ். வீ. பி. ஹெக்டர் தர்மசிரி. 2007 செப்டம்பர் 1 முதல் 2007 அக்டோபர் 9 வரையிலான காலகட்டத்தில் மாத்தளை பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியாக பணியாற்றிய சந்தர்ப்பத்தில் ஒரு அரச ஊழியராக இருந்து கொண்டு தனது பதவியை நேரடியாகவோ அல்லது வேறு விதமாகவோ பயன்படுத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படும் விதத்தில் செயற்படுவது இலஞ்சம் அல்லது ஊழல் சட்டத்தின் கீழ் குற்றமாகும். அவ்வகையில் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படக்கூடும் என்பதை அறிந்து கொண்டு அதிகாரிகளை மினுவாங்கொடவில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த தனது வீட்டின் நிர்மாணப்பணிகளுக்கு சிவில் பாதுகாப்பு அதிகாரிகளை பயன்படுத்தியமை சட்டவிரோதமானதாகும் என்ற அடிப்படையில இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

நீண்ட வழக்கு விசாரணையின் பின்பு பிரதான நீதிவான் நீதிமன்ற நீதிபதி இவ்வழக்கின் தீர்ப்பினை 2019 ஜுலை மாதம் 2 ஆம் திகதி அறிவித்தார். அதன்படி குற்றவாளிக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த ஆறு குற்றச்சாட்டுக்களுக்கும் குற்றவாளியாக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டார்.

குற்றம்சாட்டப்பட்ட ஒவ்வொரு குற்றச்சாட்டுக்களுக்கும் 1 வருட சிறைத்தண்டனை விதிக்கபட்டதுடன் ஆறு குற்றச்சாட்டுக்களில் 3 குற்றச்சாட்டுக்களுக்கு ஒரே தடவையில் கடந்து செல்லும் வகையில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமையினால் மொத்த சிறைத்தண்டணைக் காலம் 3 வருடங்களாக்கப்பட்டது.

மேலும் குற்றஞ்சாட்டப்பட்ட ஒவ்வொரு குற்றச்சாட்டுக்களுக்கும் ரூபா 50,000.00 வீதம் 6 குற்றச்சாட்டுக்களுக்கும் ரூபா 300,000.00 தண்டப்பணம் அபராதமாக விதிக்கப் பட்டது.

**12. களுத்துறை பிரதேச சபைத் தலைவர் லக்ஷ்மன் விதான பதிரனவுக்கு 5 வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கி கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்ப்பு (2019)**

ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் தொடுக்கப்பட்ட வழக்கில் களுத்துறை பிரதேச சபைத் தலைவர் லக்ஷ்மன் விதான பதிரன முறைப்பாட்டாளருக்கு நுழைவுப் பாதையை அமைப்பதற்கு அனுமதி வழங்குவதற்காக ரூபா 3 மில்லினை கோரிப் பெற்றுக் கொண்டமை தொடர்பில் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு அவருக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க குற்றஞ்சாட்டப்பட்ட களுத்துறை பிரதேச சபைத் தலைவர் லக்ஷ்மன் விதான பதிரனவை நான்கு குற்றச்சாட்டுக்களுக்கும் குற்றவாளியாக்கி 5 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். சிறைத்தண்டனை ஒரே தடவையில் செல்லும் வகையிலும் ஒவ்வொரு குற்றச்சாட்டுக்களுக்கும் தலா 5000.00 வீதம் தண்டம் விதித்தும் தீர்ப்பளித்தார். குற்றப்பணமாக 3 மில்லியனை செலுத்துமாறும் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளருக்கு 2 மில்லியன்களை நட்டஈடாக செலுத்துமாறும் கட்டளையிட்டு தீர்ப்பளித்தார்.

**13. இலஞ்சம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு 8 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு (2019)**

கொகரல்லை பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் முறைப்பாட்டாளரிடமிருந்து இருந்து ரூ.5000.00இலஞ்சமாக கோரிப் பெற்றுக் கொண்டமைக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் நான்கு குற்றச்சாட்டுகளுடன் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்தின் அடிப்படையில் கொழும்பு மேல்நீதிமன்றம் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை குற்றவாளியாக்கி தீர்ப்பளித்துள்ளது.

இங்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி விகும் கலுஆரச்சி குற்றவாளிக்கு ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் 2 வருட சிறைத்தண்டனை விதித்து தலா எட்டு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார். அத்துடன் ஒரு குற்றச்சாட்டிற்கு ரூ3000.00 அபராதமும் இலஞ்சமாகப் பெற்றுக் கொண்ட ரூபா 5000.00 இனை தண்டப் பணமாக விதித்தும் தீர்ப்பளித்ததுள்ளார்.

சாரதியான முறைப்பாட்டாளர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்து தனது நண்பர்களை பிணையில் விடுவிப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் இருப்பதற்கு முறைப்பாட்டாளரிடம் குற்றஞ்சாட்டப்பட்டவர் 5000.00 ரூபாவினை இலஞ்சமாக கோரியுள்ளார். அது தொடர்பில் முறைப்பாட்டாளரினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் 5000.00 ரூபாவினை இலஞ்சமாக கோரிப்பெற்றுக் கொண்ட சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டதுடன் அவருக்கெதிராக மேல்நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்தமை குறிப்பிடத் தக்கது.

**14. இலஞ்சம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்ப்பு (2019)**

ஒரு மோட்டார் சைக்கில் பயணியிடமிருந்து இருந்து ரூ.3000.00 இலஞ்சமாக கோரிப் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ரூ 20,000.00 அபராதமும் விதித்து கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கிராந்துருகோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமை புரிந்த பொலிஸ் அலுவலர் விபத்தொன்றில் 6 வயது சிறுவர் காயமடைந்த நிலையில் மோட்டார் சைக்கிள் பயணியிடமிருந்து 3000.00 ரூபாவினை இலஞ்சமாக கோரியதுடன் வழங்காது விடில் மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்வதுடன் சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்வதாகவும் வலியுறுத்தினார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் துரித தொலைபேசி இலக்கமான 1954 இற்கு கிடைத்த அழைப்பின் பேரில் ஆணைக்குழுவின் அதிகாரிகள் முறைப்பாட்டாளரின் உதவியுடன் சுற்றிவளைப்பினை மேற்கொண்டு குறித்த பொலிஸ் அலுவலரை கைது செய்து மேல்நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணையின்போது ஆணைக்குழுவின் சட்டவாதி சட்டத்தை நிலைநாட்டும் அலுவலர்களான போக்குவரத்து பொலிஸார் சட்ட விதிகளை பேணி செயற்படுவதனூடாகவே பாதுகாப்பான போக்குவரத்து முறையை ஏற்படுத்தி அநாவசியமான விபத்துக்களை தவிர்க்க பங்களிக்கலாம்.

எனவே இவர்களின் முன்மாதிரியான செயற்பாடு மிகவும் அவசியமாகும். ஆனால் இன்று நிலைமை படுமோசமாக மாறியுள்ளது. குறித்த துறையில் இலஞ்சமும் ஊழலும் மலிந்துள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரித்தானிய...

பிரித்தானியாவின் அரச இளவரசி, இளவரசி ஆன், எதிர்வரும் ஜனவரி 10 முதல் 13 வரை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவு விழா தொடர்பான நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இலங்கை அரசாங்கம் அவருக்கு அழைப்பு விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## இரணைமடு...

எனவே தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும், கால்நடைகள், வாழ்வாதாரங்கள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இரணைமடுகுளத்திற்கு மேல் பகுதியில் 100 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மேலும் தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் குளத்தை நோக்கி அதிக நீர் வருகை தருவதாக நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

நீர் வருகையை அடிப்படையாகக் கொண்டு வான்கதவுகள் திறக்கப்படும் அளவு தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

படிப்படியாக வான்கதவுகள் திறக்கப்படும் எனவும், அறிவுறுத்தலிற்கு அமைவாக மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதாலும், குளங்கள் வான்பாய்வதாலும் மக்கள் இடர்கள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

இடர் ஏற்படும் சந்தர்ப்பத்தில், கிராம சேவையாளர் உள்ளிட்ட கிராம மட்ட உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவத்தினரின் உதவிகளை நாடுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ம-7,100,350)

## நாட்டில் மீண்டும்...

புத்திக சமில தெரிவித்துள்ளார்.

ஜப்பான் ஜபரா, சல்வேனியா போன்ற தாவரங்கள் பெருகியதே இதற்கு முக்கிய காரணம் என அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது 5 வயதுக்கு குறைவான குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் யானைக்கால் நோயின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் தற்சமயம் கிராமப்புற யானைக்கால் நோயே அதிகளவில் பதிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## சுற்றுலா...

வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை இதனை தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் 57,394 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கமைய, டிசம்பர் மாதம் முதல் 10 நாட்களில் ரஷ்யாவிலிருந்து 8,004 சுற்றுலாப் பயணிகளும், பிரித்தானியாவில் இருந்து 5,991 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 5,336 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 2,894 சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டில் 13 இலட்சத்து 34 ஆயிரத்து 345 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். (ம-7)

## காலநிலை...

அமைச்சரும் யாழ்/கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநரும், வட மாகாண மாவட்டங்களின் இணைத் தலைவருமான திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மன்னார்/முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான காதர் மஸ்தான், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் குலசிங்கம் திலீபன் (பா.உ) ஆகியோரின் ஒருங்கிணைப்புடன் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர்கள் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவன், யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பிரதீபராஜா, வட மாகாணத்திற்கு பொறுப்பான பொலிஸ்மா அதிபர், வட மாகாணத்தின் 5 மாவட்டங்களின் அனர்த்த நிவாரண முகாமைத்துவ பணிப்பாளர்கள், உட்பட துறைசார்ந்த அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,33)

## நடிகை ரம்பா...

டார்.

நடிகை ரம்பாவின் கணவர் இந்திரகுமார் பத்மநாதன் யாழ்ப்பாணம் மானிப்பாயை பூர்வீகமாகக் கொண்ட கனடா முதலீட்டாளராவார்.

இவரின் முயற்சியாக யாழ்ப்பாணத்தில் நொதேர்ன் யுனி (Nothern uni) தனியார் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நொதேர்ன் யுனியின் அனுசரணையில் டிசம்பர் 21ம் திகதி யாழ்ப்பாணம் முற்றவெளியில் தென்னிந்திய பாடகர் ஹரிஹரன் பங்கேற்கவுள்ள பிரம்மாண்டமான இலவச இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்ட நொதேர்ன் யுனியில் சமய சம்பிரதாயபூர்வமாக பால் காய்ச்சி இன்றைய தினம் சாமி படம் வைக்கப்பட வுள்ளது. (ம-7,33)

## முன்...

வர் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாத சூழ்நிலை தோன்றினால் அவருக்கு பதிலாக மாற்று வேட்பாளர் ஒருவரை உருவாக்கும் நோக்கில் இந்த முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் இதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் மத்தியில் இருக்கும் எதிர்ப்பு காரணமாக அவர்களால் அடுத்த தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பது இந்த அமைச்சர்களது நிலைப்பாடாக உள்ளதாகவும் அந்த சந்தர்ப்பத்தை தட்டிப்பறிப்பதன் ஊடாக தமக்கு ஆதரவான ஒருவரை பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் வேட்பாளராக களமிறக்க முடியும் எனவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

ஆனால், பொதுஜன பெரமுனவுடனான கருத்து வேறுபாடுகள் காரணமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இதற்கு சம்மதிக்க மாட்டார் என்றே அறிய முடிகிறது.

இதேவேளை, பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவது உறுதியென ஐ.தே.கவின் வட்டாரங்களில் அறிய முடிகிறது. (ம-7)

## வெளிநாட்டுத்...

சுவிட்சர்லாந்து, ஜப்பான், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நேற்று விஜயம் செய்தனர்.

சுவிட்சர்லாந்தின் தூதுவர் சிறி வால்ட், ஜப்பான் தூதுவர் ஹிடேகி மிசுகோஷி மற்றும் தென்னாபிரிக்காவின் உயர்ஸ்தானிகர் சடைல் ஷால்க் ஆகியோர் நேற்று பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைத் தலைமையகத்திற்கு சென்று கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2023.12.14
சீட்டிழுப்பு இலக்கம் 0154
Q 1 9 7 4 2 1 Q

தன நிதானய
திகதி - 2023.12.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1358
Y 48 60 62 71 Y
Double Chance 20731

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3570
சீட்டிழுப்பு திகதி 14.12.2023
V 03 08 76 79 V
38417

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.12.14
சீட்டிழுப்பு இலக்கம் 0637
கும்பம் 08 14 45 61 கும்பம்
34343 19

மஹஜன சம்பத
திகதி 2023/12/14
சீட்டிழுப்பு இலக்கம் 5328
J 5 5 8 6 2 8

மெகா பவர்
திகதி 14/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1676
E 18 24 26 42 55
41733

சுபிரி வாசனா (Supiri Dhana Sampatha)
14.12.2023 வெற்றி வாரம் 036
N 2 4 2 1 2 1
60252
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,887,495.20
தொலை பேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2302 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.12.14 தினம் வியாழக்கிழமை
20 26 32 46 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,437,196/-
78115

சனிதா
திகதி 2023.12.14 வெற்றி வாரம் 4463 வர்ணம் சிவப்பு
01 28 38 57 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,841,472.00
1 0 5 3 1

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4014 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.14 தினம் வியாழக்கிழமை
05 14 22 59 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,519,620/-
670814

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 04 01 54 69 72
சீட்டிழுப்பு வாரம் 1478
திகதி 2023.12.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 477,469,664.20

அத கோட்டிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2128
சீட்டிழுப்பு திகதி : 2023.12.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,100,552/-
04 09 17 52 S
516696


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L தொழினுட்பப்பிரிவு

Techna
Technical Institute
Smart thinking leads to innovate

விசேட செயலமர்வு
077 170 3549
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

**A/L 2023**
தொழினுட்ப பிரிவு மாணவர்களுக்கான
கருத்தரங்கு

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
M.விஷ்ணு
16, 17 DEC காலை 8.00 - 12.00 மணி வரை

பொறியியல் தொழினுட்பவியல்
S.மயூரதன்
16, 17 DEC காலை 8.00 - 12.00 மணி வரை

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
S.சக்தி
16, 17 DEC மாலை 12.30 - 4.30 மணி வரை

தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்
T.லவன்
விவசாய விஞ்ஞானம் S.சஜீபன்
கணிதம் T.சசிகரன்
புவியியல் S.Pகரன்
23, 24 DEC காலை 8.00 - 12.00 மணி வரை
(C-7903)

அனுமதிகளுக்கு 15/12/2023 முன் முற்பதிவுகளை நேரடியாக அலுவலகத்தில் மேற்கொள்ளவும்.

## துப்பாக்கி சூடு

ராகமை வல பொல பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த 3 பேர் ராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ராகமை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் 17 வயதான இளைஞர் ஒருவரும் அடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை
மானிப்பாய்

வேலை வாய்ப்பு
வரவேற்பாளர் (Receptionist)

தகைமைகள்
* முன் அனுபவம் விரும்பத்தக்கது
* சம்பளம் நேர்காணலின் போது தீர்மானிக்கப்படும்

உங்களுடைய CV ஐ surgerygmh@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்
Green Memorial Hospital, Manipay ☎ 0212255157 ◎0770661031
(C-7899)

# A/L வரலாறு
எப்போதும் யாழின் முதன்மை ஆசிரியர்
**M.பத்மன்**
B.A(Hons)History, P.G.D.E, Dip.in.Psy, M.A(Hons)History, M.E.D(OUSL)
A/L 2025 ற்கான அனுமதிகள் ஏற்கப்படுகின்றன
கற்பிக்கப்படும் இடங்கள் :
High College குளப்பிட்டி
Bitsman மானிப்பாய்
DMI ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
077 482 5587
(C-7904)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

வாருங்கள்... இலவசம்...
**விடுதலைப் பெருவிழா**
கவலை, கண்ணீர், தீராத வியாதி, பிசாசின்பிடி, பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள், பரம்பரை சாபங்கள், அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து
**இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!**
நாற்சதுர சுவிசேஷ சபை, முத்திரைச் சந்தி, நல்லூர்.

15 16,17 டிசம்பர் 2023 4.00Pm
15ஆம் திகதி ஒளிவிழா நிகழ்வும், 16ஆம் 17ஆம் திகதிகளில் சுகமளிக்கும் ஆராதனையும் நடைபெறும்.
இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
673, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(18170)

விரைவு பொதிகள் சேவை
DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.
Lanka Cargo Worldwide Express
பணியாளர் தேவை
இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
070 375 0002
(18233)

Canada and Italy Visa
(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும். மேலும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
பணியாளர் தேவை
VISA CONSULTANT
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
077 038 5584
(18234)

# காணி விற்பனைக்கு
GOLDEN Real Estate
கைதடிச் சந்திக்கு அருகாமையில் 22 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.
- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ளமுடியும்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

077 468 3354, 076 755 8606
(18231)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-7902)
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7902)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 22.11.2023 புதன்கிழமை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிபதி A.யூட்சன் அவர்களின் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகப் பதவி ஏற்ற

திரு. மகாலிங்கம் விவேகானந்தன்

அவர்களின் சேவை சிறக்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

BEST WISHES

வாழ்த்துவோர்:
மீசாலை கிழக்கு, மீசாலை.
நண்பன் சி.செல்வராசா
(18216)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களையும் பாடசாலைச் சமூகம் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்



ற.டிறோன் 167



டா.மோகீத் 156



ஸ்.எப்றோன் 148

70 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்
★ அ.அஷ்வின் ★ சி.சோபிஸ்ரன் ★ வி.பிரணவன் ★ த.ஹர்சன்
★ க.ஜஸ்வின் ★ த.சஞ்ஜித் ★ த.சயூறா ★ ரெ.வெஸ்ரீன்
★ சொ.சாருபன் ★ ஜெ.வைஷ்ணவி ★ அ.அபினாஸ் ★ ச.சஞ்சாயினி
★ நி.ஷாம்ஜித் ★ இ.ஜென்சிகா ★ றெ.டிலோஜன் ★ கே.ஜிதுசன்
★ கு.அபிஷா ★ பி.அஸ்வின் ★ சு.ஜெகூரன் ★ மோ.துசியங்கா

யா/உடுவில் அ.மி.த.க பாடசாலை
பாடசாலையின் பங்குதாரர்கள்
(18225)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org